ஜீவ நீரோடை

உண்மையைச் சொல்! உரக்கச் சொல்!

தனிப்பிரதி ரூ. 15/- வருட சந்தா ரூ.150/

VOL. 22 செப்டம்பர் 2021 ISSUE 8



NOW AVAILABLE

SAMSON PAUL'S PUBLICATIONS IN ENGLISH

TO COME CLOSER TO GOD

BOOKS FILLED WITH DIVINE INSPIRATIONS



₹60



₹60



₹60



₹70

₹100

Samson Paul's Daily Devotional Books in English

1. Towards The Goal Daily - Rs. 120/-
2. Meet This Day With God - Rs. 160/-
3. In Your Ways - Rs. 160/-
4. Stream of Life - Rs. 50/-
5. God's Guidance Today - Rs. 50/-
6. Walking with God Daily - Rs. 50/-
7. A Journey with God - Rs. 80/-
8. In the Day's of Youth - Rs. 100/-
9. O Lord in thy Presence - Rs. 100/-
10. Every Day with the Everlasting God . - Rs. 100/-
11. Walking Closer with God - Rs. 100/-
12. Every day in His Presence - Rs. 100/-
13. Blessed word for today's Life - Rs. 100/-
14. Be Renewed in Mind Daily - Rs. 100/-
15. God's Words for Young Hearts - Rs. 100/-
16. Daily A New Chappter - Rs. 100/-
17. For the Heart of Blooming Buds - Rs. 100/-
18. Word of Truth Today - Rs. 120/-
19. This Day To Live - Rs. 150/-

உள்ளே...

❂ இருதயம் கடினப்படுவது எப்படி? 5

❂ ஆத்தும பாரம் எதற்காக? 11

❂ எத்தனை தவறு செய்தாலும் விலகாத அபிஷேகமா? 15

❂ யாரையும் குறை கூறக் கூடாதா? சில விளக்கங்கள் 19

❂ மற்றவர்களின் பார்வைக்கு ஏற்ற தோற்றம் 24

❂ மேலானவைகளைப் பயன்படுத்துவாரில்லையே 29

தினசரி தியான நூல்கள்



₹120

₹120



₹100

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இன்னுமொரு புதிய மாதத்திற்குள் வந்து சேரச் செய்த தேவனைத் துதிக்கின்றேன். அன்பு வாசகர்கள் யாவருக்கும் மகிழ்ச்சியான தேவ அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். இந்த மாதத்திலும் தேவன் தந்த நல்ல வார்த்தைகளை உங்களோடே இந்த இதழ் வாயிலாகப் பகிர்ந்து கொள்வதில் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். இந்த ஊழியங்களை நேசித்த நீங்கள் ஜெபிப்பதையும், கரிசனையோடு பொருளாதார ஆதரவு தருவதையும் தேவ சமுகத்தில் நினைத்துச் ஜெபிக்கின்றேன். கர்த்தர் உங்களுக்கு அபரிமிதமான பலன்களை அருள்வாராக.

மழை விட்டாலும் தூறல் விடவில்லை என்பது போல, கொரோனா இரண்டாம் அலை பேரளவில் அடங்கிவிட்ட போதிலும் ,அங்குமிங்கும் அநேகர் இன்னும் அதனால் பாதிக்கப்படும் நிலை தொடருகிறது. சமூக விலகல் என்ற ஆலோசனையைத் தொடர்ந்து விழிப்புணர்வோடு கடைப்பிடிப்பது நலமானது. கொரோனா காலங்கள் நமக்கு ஏராளம் பாடங்களைக் கற்றுத்தந்துள்ளது. அவற்றைக் கருத்துடன் கவனிப்பது அவசியமானது.

ஆரோக்கியமான போதனைகள் உடைய சபை ஐக்கியங்களும், முன்மாதிரி வாழ்க்கைமுறை உடைய தேவ ஊழியர்களின் வழிநடத்துதலும் நமக்கு மிக மிக நன்மையானவை. ஆயினும், இவற்றை சார்ந்திருக்கும் வாய்ப்புகள் நீங்கும்போது, தேவனோடு தனித்துறவாடுதலை முற்றிலும் சார்ந்து நின்று, வெற்றியாய் வாழப்பழக வேண்டும். சபைக் கூடுகைகள் முடக்கப்பட்ட போது அநேகர் தங்களை மேய்ப்பனற்ற ஆடுகளாக உணர்ந்தனர். அநேகர், தங்களைத் தொடர்ந்து ஒளிர இயலாத விளக்குகளாக உணர்ந்தனர். அநேகர், தங்களை நூலறுந்த பட்டங்களாக உணர்ந்தனர். அநேகர், தங்களை கற்பாறையின்மேல் முளைத்து வளர்ந்து, விரைவில் வீழ்ந்து போன செடிகளாக உணர்ந்தனர்.

காரணம் என்ன? சபை ஐக்கியத்தில் பங்கேற்கும் ஏராளமான கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்குள் வேர் கொண்ட அனுபவம் இல்லாதவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்ட அனுபவம் இல்லாதவர்களாகவுமே உள்ளனர். சபைச் செயல்பாடுகள் முடக்கப்பட்ட காலங்களில் அநேகர் கரையில் வீழ்ந்த மீன்களைப் போல, தொடர்ந்து துடிப்புடன் செயல்பட இயலாமல் போனமைக்கு இதுவே காரணம்.

இனிவரும் காலங்கள் கர்த்தரைத் தங்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் நிச்சயத்தோடு அறிந்து, அவரைச் சார்ந்திருந்து வாழப் பழகியவர்கள் மட்டுமே நிலை நிற்க முடியும். நன்றாகச் ஜெபிக்கவும், நன்றாக ஆராதிக்கவும் நன்றாகச் செயல்படவும் சபை ஊழியர்களின் தூண்டுதலைச் சார்ந்திருந்து பழகியவர்கள், இனிவரும் காலங்களில் நிலை நிற்பது கடினம். கர்த்தரை முற்றிலும் சார்ந்திருந்து கர்த்தரால் நடத்தப்படும் அனுபவத்தைத் தேடுவோம். அதுவே அவசியமானது.

கர்த்தர் உங்களோடிருப்பாராக.

கர்த்தரின் பணியில்
உங்கள் சகோதரன்

சாம்சன்பால்

இருதயம் கடினப் படுவது எப்படி?

“கர்த்தருடைய சமுகத்தை நாம் உணர்வதற்குப் பெரிய அளவில் உதவி செய்வது தனி ஜெபமே. தனி ஜெப வேளைகள் கணிசமாக இருக்க வேண்டும். அங்குதான் தேவ பிரசன்னம் உணரப்படுகிறது. தேவ பிரசன்ன சூழ்நிலையில் எவ்வளவுக் கெவ்வளவு இருதயம் கொண்டு போகப்படுகிறதோ, அந்த அளவிற்கு அது கடினத்தன்மைக்கு விலகிப் பக்குவப்படும்.”

உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள் என்று எபிரெயர் 3:15-ல் வாசிக்கின்றோம். இருதயம் கடினப்படுவது என்றால் என்ன? தேவன் நம்முடைய இருதயத்தை தமக்கு இசைந்த விதமாகச் செயல்படுத்தி நடத்த விரும்புகிறார். நம்முடைய இருதயம், தேவன் ஒரு வார்த்தையைச் சொல்லும் போது, அதற்குக் கீழ்ப்படிய இயன்றதா யிருக்க வேண்டும். தேவன் நம்மை உணர்த்தும் போது அந்த உணர்த்து தலை ஏற்று, நாம் நம்மைச் சரிசெய்ய இயன்றவர்களாயிருக்க வேண்டும். தேவன் எதைச் சொன்னாலும் அதன்படி செயல்பட இயன்றவர்களாயிருக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நம்முடைய இருதயம் கடினமாயிருக்கிறது என்று அர்த்தம்.

தேவன் நமக்குச் சொல்லுகின்ற எதையும் கேட்டுப் பின்பற்ற வேண்டு மானால் நம்முடைய இருதயம் கடின மாகிவிடாமல், நாம் கவனமுடன் அதனைக் காக்க வேண்டும். எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள் என்று வேதாகமத்தில் வாசிக்கின்றோம். (நீதிமொழிகள் 4:23) களிமண்ணைத் தொடர்ந்து ஈரத்தன்மை போய்விடாமல் பாதுகாத்தால்தான்,

குயவன் அதனை தான் விரும்பும் ஒரு பாத்திரமாக வனைய முடியும். அதுபோல, கர்த்தராகிய குயவன் நம்மை அவர் விரும்புகிற விதமாக வளைக்கவும், நெளிக்கவும், மாற்றவும், திருத்தவும் தக்கதாக நம்முடைய இருதயம் கடினமற்று, ஆவிக்கேற்ற ஈரத்தன்மையோடு பாதுகாக்கப்படவேண்டும்.

களிமண் ஈரமான நிலையில் வனைவதற்கேற்றபடியான பக்குவநிலையில் தக்கவைக்கப்படுவதற்கு, சில விஷயங்களைத் தவிர்க்க வேண்டும். அவ்விதமே, சில விஷயங்களைச் செய்யவும் வேண்டும். எளிதாக வெம்மையடையாத சூழலில் களிமண் வைக்கப்பட வேண்டும். அதுபோல, வாழ்க்கை சூழ்நிலைகளின் நடுவிலும், உலகச் சூழல்களின் நடுவிலும் நம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்தும் தன்மையுள்ள காரியங்களுக்கு நம்மை விலக்க வேண்டும். எவைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை முதலாவது பார்ப்போம்.

பக்தி விருத்திக்கு உதவாத ஐக்கியங்கள்

நாம் எல்லோரைப் போல நம்முடைய இருதயத்தை எல்லா உலகக் காரியங்களும் பிரவேசிக்கும் விதமாக வைத்துக் கொள்வது நல்லதல்ல. எல்லோரிடம் நாம் நல்ல உறவுடன் இருக்கலாம். ஆனால், எல்லோரிடமும் நெருங்கிய ஐக்கியத்தோடு இருக்கக்கூடாது. நம்மிடம் நெருக்கமாயிருப்பவர்கள் எப்பொழுதும் நம்முடைய வியாபாரம், தொழில், அரசியல், சமுதாய நிகழ்வுகள் தொடர்பான காரியங்களையே பேசிக் கொண்டிருந்தால், இருதயம் ஆவிக்கேற்ற ஈரத்தன்மையை இழக்கும். அரசியல் அறிவும் வேண்டும். வியாபாரம் தொழில் சம்பந்தமான பகிர்வுகள் வேண்டும். சமுதாயச் சூழல்கள் தொடர்பான கருத்து அறிதல்களும் வேண்டும். ஆனால், நம்முடைய நண்பர்களிடமிருந்து இதுபோன்ற விஷயங்களை மட்டுமே கேட்க முடிந்தால், அவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல என்று அர்த்தம்.

அவர்களிடமிருந்து பக்திவிருத்திக்கேதுவான எதையும் கணிசமாகப் பெற இயலாவிட்டால், அந்த ஐக்கியங்களைக் குறிப்பிட்ட அளவின் எல்லைகளுக்குள் நிறுத்தப் பழக வேண்டும். ஏனென்றால், பக்திவிருத்திக்கேதுவான தன்மையற்ற பல விஷயங்களையே நாம் கேட்டுக்

கொண்டிருக்கும் போது, அதனால் இருதயம் ஆவிக்கேற்ற ஈரத்தன்மையை இழக்கும். அப்போஸ்தலனாகிய பவுல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுவதற்கு அதிகமாகத் தூண்டுவதை நிருபங்களிலே வாசிக்கின்றோம். (கொலோ 3:16, எபே 5:19, எபிரெயர் 10:25) ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும் என்று வேதம் சொல்கிறது.

உலகப்பிரகார சிந்தனைகள்

உலகத்தில் வாழ்கின்ற நாம் உலகப்பிரகாரமான காரியங்களை முற்றிலும் தவிர்த்துவிட்டு வாழ இயலாது. வேலை, தொழில் முன்னேற்றம், பணம், குடும்பம் என பலகாரியங்களைச் சிந்திக்காமல் வாழ இயலாது. ஆனால், எப்பொழுதும் வாழ்வின் தேவைகளைக் குறித்தும், வேலை, தொழில் குறித்தும், பணம், பொருள் குறித்தும் சிந்தித்துக் கொண்டேயிருந்தால், இருதயம் ஆவிக்கேற்ற தன்மைகளை இழந்துவிடும். பக்தி இருந்தாலும் கர்த்தருக்கேற்றபடி நம்மை வளைத்து நெளித்து வாழ இயலாமல் போய்விடும். வாழ்க்கையின் பெரும்பான்மையான நேரங்கள் பணம், பொருள், தொழில் திட்டமிடுதல் சம்பந்தமாகப் போய்விட்டால், இருதயம் ஆவிக்குரிய ஈரத்தன்மையை இழந்து கடினமாகிவிடும்.

சிலர், கொஞ்சநேரம் ஜெபம், கொஞ்ச நேரம் வேதவாசிப்பு என செலவிட்டாலும், பிற நேரங்கள் முழுவதும் பணம், பொருள், சம்பாத்தியம் போன்ற காரியங்களிலேயே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். நாம் எவ்வளவு சம்பாதித்தாலும் அவற்றைக் கொண்டு நாம் மிகக்குறைவான காலமே இந்த பூமியிலே வாழ முடியும். தேவனுடைய இராஜ்யம்தான் முடிவில்லாதது. அப்படியென்றால், நாம் அதற்காக இன்னும் எவ்வளவோ நேரங்களைச் செலவிட வேண்டும்.

நம்முடைய இருதயம் கர்த்தருக்கேற்ற பக்குவ நிலையோடு காணப்படுவதற்கு, நாம் போதுமான நேரங்களைச் செலவழிக்க வேண்டிய தேவை உண்டு. கர்த்தருக்காக வாழ்கின்ற வாழ்வு மட்டுமே பரலோகம் போய்ச் சேரும். எனவே, நம்முடைய சராசரிப் பக்தி நேரங்களுக்கு அப்பாலும், தேவனைக் குறித்த வாஞ்சையோடு நாம் இரு

“சில பொழுது போக்குகள் தன்னளவில் தவறற்றவைகள் என்ற அடையாளத்தைக் கொண்டிருக்கலாம். ஆனால், அவை நமக்குள் தவறான விதமாக ஒரு கடின இருதயத்தை ஏற்படுத்திவிடும்.”

“அவர்களிடம் ஜெபம், வேத வாசிப்பு, காணிக்கை, ஆராதனை என பல விஷயங்கள் இருந்தாலும் கர்த்தருக்கு உகந்தவர்களாக வாழ வேண்டும் என்ற இலக்கு இல்லை. எனவேதான், எவ்வளவு பிரசங்கங்கள் கேட்டாலும், கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிசாய்த்து வாழ்வதில்லை.”

தயத்தைப் பலப்படுத்த வேண்டும். கணிசமான நேரங்களைச் ஜெபத்திலும், வேத வாசிப்பிலும், பிற தேவனுக்குரிய காரியங்களிலும் செலவிட்டாலும், அவை நமக்கு நஷ்டமாயிராது.

ஆகாத பொழுது போக்குகள்

இது பொழுதுபோக்குகள் பெருத்துப் போன காலம். தொலைக்காட்சி, கூகிள், யூடியூப், முகநூல் என ஏராளமான ஊடகங்கள் வாயிலாகப் பொழுது போக்கு விஷயங்கள் நதிபோல் வந்து பாய்கின்றது. அலைபேசியும், ஸ்மார்ட் போனும் பொழுது போக்குக் கருவியாகவே பலரால் கையாளப்படுகிறது. பலவிதமான அலுவல்களோடும், பொறுப்புகளோடும், கடமைகளோடும் வாழ்கின்ற மனிதனுக்குச் சற்று நேரம் பொழுது போக்க ஏதாவது இருப்பது அவசியமே. ஆனால், பலருடைய வாழ்க்கை பொழுது போக்கையே முதலிடத்தில் வைத்துள்ளன.

ஆவிக்குரியவர்களாக வாழ விரும்பும் எவரும் பொழுதுபோக்குகளின் பிடியில் சிக்கி விட்டால், இருதயத்தைக் கடினப்படாமல் காக்க முடியாது. பொழுது போக்கு விஷயங்களை அதிகமாகத் தேடுகின்ற மனிதன் கர்த்தருக்கேற்றபடி செயல்படும் ஆவிக்குரிய பக்குவத் தன்மையை எளிதாக இழந்து போவான்.

பொழுதுபோக்கு விஷயங்கள் நம்முடைய மதிப்புமிக்க பொழுதுகளை அழிக்கும் தன்மையுடையவை. அவ்விதமே பொழுதுபோக்குகளின் மேலாண்மையால் நம்முடைய வாழ்க்

கையும் அழிந்து போக வாய்ப்புண்டு. அநேகர் ஓயாத பொழுது போக்கு ஈடு பாடுகளால் நேரங்களை மட்டுமல்ல, வாழ்க்கையையும் அழித்துவிடுகிறார்கள். சிலர் கடமைக்காகக் கொஞ்ச நேரம் ஜெபித்து, பைபிள் வாசிப்பார்கள். அது முடிந்துவிட்டால், நாள் முழுதும் பொழுது போக்கு விஷயங்களையே, திரும்பத் திரும்ப தேடிக் கொண்டிருப்பார்கள்.

இப்படிப்பட்டவர்களின் இருதயம் கடினப்பட்டுப் போகும். அதன் விளைவாக அவர்கள் கர்த்தரின் வார்த்தையின்படி செயல்படும் தன்மையை இழந்து போவார்கள். சில பொழுது போக்குகள் தன்னளவில் தவறற்றவைகள் என்ற அடையாளத்தைக் கொண்டிருக்கலாம். ஆனால், அவை நமக்குள் தவறான விதமாக ஒரு கடின இருதயத்தை ஏற்படுத்திவிடும்.

கடினப்படுவதைத் தவிர்க்க

ஆம். இதுபோன்ற விஷயங்கள் ஆவிக்குரியமென்மைத்தன்மையையும், ஆவிக்குரிய நுண்ணுணர்வையும் அழித்து, தேவனுடைய வார்த்தைகளுக்கு இசைந்து வாழ இயலாதபடி செய்துவிடும். கர்த்தர் நம்முடைய வாழ்க்கையை குயவனைப் போல மேன்மையாக வனைய முடியாதபடி அது கடினத் தன்மையாகிவிடும். இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் இருதயங் களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று ஆவியானவர் தொடர்ந்து பேசுகிறார். (எபிரெயர் 3:15) சில விஷயங்களைத் தவிர்க்காவிட்டால் இருதயம் கடினப் படுவதைத் தடுக்கமுடியாது. அதுபோல, வேறு சில விஷயங்களைச் செய்யவும் வேண்டும். நம்முடைய இருதயம் தேவ பிரசன்னத்திற்குள் அதிகமாகக் கொண்டு போகப்பட வேண்டும். உலகத்தை விட்டும், வாழ்வு தொடர்பான அலுவல் களை விட்டும், பொழுதுபோக்குத் தேடல்களை விட்டும், இருதயத்தைக் கணிசமான நேரங்கள் விலக்கித் தேவ சமுகத்திற்குள் கொண்டு போகப்பட வேண்டும். கர்த்தருடைய சமுகத்தை நாம் உணர்வதற்குப் பெரிய அளவில் உதவி செய்வது தனி ஜெபமே. தனி ஜெப வேளைகள் கணிசமாக இருக்க வேண்டும். அங்குதான் தேவ பிரசன்னம் உணரப்படுகிறது. தேவ பிரசன்ன சூழ்நிலையில் எவ்வளவுக்கெவ்வளவு இருதயம் கொண்டு போகப்படுகிறதோ, அந்த அளவிற்கு அது கடினத்தன் மைக்கு விலகிப் பக்குவப்படும்.

இரண்டாவதாக, தேவ வார்த்தைகள் என்னும் தண்ணீரால் இருதயத்தை ஈரத்தன்மையுடையதாக்கிக் கொண்டே யிருக்க வேண்டும். தேவ வார்த்தைகளை எந்த அளவிற்கு இருதயத்தில் வைக் கவும், தியானிக்கவும் செய்கின்றோமோ, அந்த அளவிற்கு இருதயம் ஆவிக்குரிய பக்குவத்தன்மையோடு விளங்கும். தேவனுடைய வார்த்தைகளை இரவும் பகலும் தியானிக்க, யோசுவாவுக்கு தேவன் ஆலோசனை கூறினார். தேவ வார்த்தைகளை ருசிக்கும் இருதயத்தில் தேவ சத்தத்திற்குச் செவி கொடுக்கும் ஆவிக்குரிய தன்மை செயல்படும். அந்த இருதயம் கடினமடைந்து போகாமல், தேவனுக்கேற்றபடி கீழ்ப்படிந்து செயல் படும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஆவிக் குரிய வாழ்க்கையில் ஒரு மேலான தரிசனம் வேண்டும். தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்ற இலக்கும், தரிசனமும் இருந்தால்தான், இருதயத்தைக் கடினப்பட்டுவிடாமல் சரியாக வைக்கும் ஒரு உண்மையான

விருப்பம் ஏற்படும். ஒரு போர்வீரன் தன்னுடைய உயர் அதிகாரிக்குச் செவி கொடுத்துச் செயல்படும்படியான ஒரு ஆயத்தமான இருதயத்தை உடையவனா யிருப்பான். நாமும் நல்ல போர்ச் சேவகர் களாக இருக்கவே அழைக்கப்பட் டுள்ளோம். (2 தீமோத்தேயு 2:3)

அநேகருக்கு ஆசீர்வாத இலக்கு உண்டு. அநேகருக்கு வல்லமை இலக்கு உண்டு. ஆனால், பரிசுத்த இலக்கு இல்லை. தேவனைப் பிரியப்படுத்தி வாழும் இலக்கு இல்லை. எனவே, அவர்களிடம் ஜெபம், வேத வாசிப்பு, காணிக்கை, ஆராதனை என பல விஷயங்கள் இருந்தாலும், கர்த்தருக்கு உகந்தவர்களாக வாழ வேண்டும் என்ற இலக்கு இல்லை. எனவேதான், எவ்வளவு பிரசங்கங்கள் கேட்டாலும், கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிசாய்த்து வாழ்வ தில்லை. இலக்கு இல்லாதவர்களின் இருதயதங்களை வேறு பல விஷயங்கள் கடினமாக்கிக் கொண்டேயிருக்கும். மரத்தை நட்டவனுக்கு அந்த மரத்தி ன்மேல் எதிர்பார்ப்பு இல்லாவிட்டால், அந்த மரம் உரிய விதமாக வளராது. கர்த்தருக்கேற்ற ஒரு வாழ்க்கை வாழ வேண்டும் என்ற இலக்கு இருந்தால்தான், கர்த்தருக்கேற்றவிதமாக இருதயத்தை ஆவிக்கேற்ற ஈரத்தன்மையோடு பாதுகாக்கும் விழிப்புணர்வு ஏற்படும்.

❂ ❂ ❂

NEWS இந்தியச் செய்திகள்

- இந்திய சுதந்திரத்தின் 75 வருட கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக நாட்டின் பல்வேறு பகுதிகளை இணைக்கும் 75 வந்தே பாரத் இரயில்களை இயக்கப் போவதாக பிரதமர் நரேந்திர மோடி சுதந்திர தின விழாவில் அறிவித்துள்ளார். அடுத்த சுதந்திர தினத்திற்கு முன்பு இந்த வந்தே பாரத் இரயில்கள் திட்டம் முழுமையடையும்.

- இந்தியாவில் இஸ்ரேல் நாட்டு தயாரிப்பான பெகாசஸ் என்ற உளவு மென் பொருளை பயன்படுத்தி 300 பேரின் அலைபேசிகள் ஒட்டு கேட்கப்பட்டதாக புகார் எழுந்தன. இதனைப் பாராளுமன்றத்தில் விவாதிக்க 15 எதிர் கட்சிகள் கோரிக்கை விடுத்தன. ஆனால், பாராளுமன்றத்தில் அது விவாதத்திற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் இதனை சுப்ரீம் கோர்ட் விசாரிக்க வேண்டும் என்று கோரி, தி இந்து பத்திரிகை ஆசிரியர், ராம் மற்றும் சசிகுமார் ஆகியோர் மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். இது தொடர்பாக விசாரிக்க நிபுணர் குழு அமைக்கப்படும் என்று மத்திய அரசு கோர்ட்டில் கூறியுள்ளது.

- அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் உள்ள தி.மு.க அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழகத்தில் காலியாயிருந்த 58 இடங்களுக்கு பல்வேறு ஜாதிகளை சேர்ந்தவர்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இதற்குப் பலத்த எதிர்ப்பும் எழுந்துள்ளது. ஆகம விதிகளின்படிதான் அர்ச்சகர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்புகளிலிருந்து கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

ஆத்தும பாரம் எதற்காக?

"நாம் சபைக்குப் போவது பெரிய விஷயமே. ஆராதனை செய்வது பெரிய விஷயமே. ஜெபம் செய்வது பெரிய விஷயமே. ஊழியம் செய்வது பெரிய விஷயமே. தப்பு தவறு செய்யாமல் வாழ்வது பெரிய விஷயமே. ஆனால், இவை எல்லாம் இரும்பிலிருந்து பித்தளையாகும் அனுபவமே. ஆனால், நாம் பரிசுத்தவான்கள் என்ற உயர்ரகத் தங்கமாக மாற வேண்டும்."

ஒருவர் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, ஒரு ஆழமான பக்தி அனுபவத்திற்கு வரும்போது, தன்னைப் போல மற்றவர்களும் அது போன்ற அனுபவத்திற்கு வரவேண்டும் என்று ஆசைப்படுகின்றார். மிக முக்கியமாக தன்னுடைய குடும்பத்தார் மற்றும் தனக்கு நெருங்கின உறவில் உள்ளவர்கள் அவ்விதம் வரவேண்டும் என எதிர்பார்க்கின்றார். தான் ஒரு மிக நல்ல பக்தி அனுபவத்திற்கு வந்தது போல, எல்லோரும் அவ்விதம் வருவதற்கு அவர் விரும்புவதை, ஆத்தும பாரம் என்று எண்ணுகின்றார்.

தான் ஆத்தும மீட்பைப் பெற்று விட்டதாக எண்ணுகின்ற அவர், தனக்குப் பிரியமானவர்களும் அவ்விதம் ஆத்தும மீட்பைப் பெற வேண்டுமே என்று ஆதங்கப்படுகின்றார். தன்னைப் போல

எல்லோரும் மாற வேண்டும் என்று விரும்புகின்றார். அது போன்ற சூழ் நிலையில், ஒருவர் தன்னைப் போல ஞானஸ்நானம் பெற்று சபைக்கு வந்து ஆராதனை செய்து, ஜெபம் செய்து இப்படியாக மாறிவிட்டால் மிகவும் சந் தோஷப்படுகிறார். ஒரு ஆத்துமா மீட்கப் பட்டு விட்டதாகத் திருப்தி அடைகின்றார்.

நம்மைப்போல் மற்றவர்களும்

ஆனால், இன்னொருவர் ஆத்தும மீட்பைப் பெற வேண்டும் என்று ஒருவர் எண்ணுகின்றபோது, அதன் பின்னால் உள்ள உண்மையான ஆசை என்ன என்பது முக்கியமானது. என்னைப் போல அவர் ஞானஸ்நானம் பெற வேண்டும். என்னைப் போல சபைக்கு வரவேண்டும். என்னைப் போல பக்தியாக ஆராதிக்க வேண்டும். என்னைப் போல ஜெபம் செய்ய வேண்டும். என்னைப் போல பக்தி சம்பந்தமான காரியங்களில் ஆர்வமாய்ச் செயல்பட வேண்டும். இவைகளை அவர் செய்தால் ஒரு ஆத்துமா மீட்கப்பட்டதாக எண்ணுகின்றோம். சுருக்கமாகச் சொல் வதென்றால், நம்மைப் போல அவர் பக்தியாக வாழ வேண்டும்.

ஆனால், நாம் நம்மைப் போல இன்னொருவர் ஒரு பக்தி அனுபவம் பெற வேண்டும் என்று நினைக்கும் போது, நம்முடைய பக்தி அனுபவத்தின் நிலை என்ன என்பதையும் கவனிக்க வேண்டும். உண்மையான தேவ பக்தி அனுபவம் என்பது, நாம் உயர்ந்த ஆவிக்குரிய சுபாவங்களோடு வாழ்வதாகும். உண்மையான ஆவிக்குரிய அனுபவம் என்பது நாம் இயேசு கிறிஸ்துவால் மிக விசேஷமான மனமாற்றத்தையும், வாழ்க்கை மாற்றத்தையும் பெற்ற தாகும். நம்மைப் போல இயேசுவிடம் மற்றவர்களும் பக்தியாயிருக்க வேண் டுமே என்பது அல்ல. நம்மைப் போல மற்றவர்களும் ஞானஸ்நானம் பெற வேண்டுமே என்பது அல்ல. நம்மைப் போல மற்றவர்களும் சபைக்கு வந்து ஆராதனை செய்ய வேண்டும் என்பது அல்ல. நம்மைப் போல மற்றவர்களும் ஜெபிக்கின்றவர்களாக மாற வேண்டுமே என்பது அல்ல.

நம்மைப் போல மற்றவர்களும் அன் புடன் வாழ வேண்டுமே. நம்மைப் போல மற்றவர்களும் தாழ்மையுடன் வாழ வேண்டுமே. நம்மைப் போல மற்றவர் களும் பொறுமையுடன் வாழ வேண் டுமே. நம்மைப் போல மற்றவர்களும்

“ நாம், நம்மைப் போல பிறரும் பக்தியாக வாழ வேண்டுமே என்று ஆசைப்படுவது மத பக்தி. நாம் நம்மைப் போல பிறரும் பரிசுத்தமாக வாழ வேண்டுமே என்பதுதான் ஆத்தும வாஞ்சை. ”

பிறருக்கு முன்பாகச் சாட்சியாக வாழ வேண்டுமே. நம்மைப் போல மற்றவர்களும் பண ஆசை, பொருளாசை, இச்சை, ஆடம்பரம் போன்றவற்றிற்கு இசைந்து போகாமல் வாழ வேண்டுமே. நம்மைப் போல மற்றவர்களும் சுபாவங்களிலும், நடத்தைகளிலும், செயல்களிலும் நோக்கங்களிலும் முன்மாதிரிகளாக வாழவேண்டுமே. இவ்விதமான ஒரு ஆதங்கம்தான் உண்மையான ஆத்துமபாரத்தின் அடையாளங்கள்.

நாம், நம்மைப் போல பிறரும் பக்தியாக வாழ வேண்டுமே என்று ஆசைப்படுவது மத பக்தி. நாம் நம்மைப் போல பிறரும் பரிசுத்தமாக வாழ வேண்டுமே என்பதுதான் ஆத்தும வாஞ்சை. இவ்விதமாக நாம் பிறர் மாற வேண்டும் என்று ஆசைப்படும் விதமாக நம்முடைய வாழ்க்கை இல்லாவிட்டால், நாமும் உண்மையான பக்தி அனுபவமுடையவர்கள் அல்ல. அப்படியிருக்கும் போது, பிறர் நம்மைப் போல மாற வேண்டும் என்று ஆசைப்படுவது, உண்மையான ஆத்துமபாரம் அல்ல. நம்மைப் போல மற்றவர்களும் பக்தியுடையவர்களாக மாற வேண்டும் என்று ஆசைப்படுவது, வெறும் மத பக்தியும், மதமாற்ற வாஞ்சையுமே.

இரும்பிலிருந்து தங்கம்

அநேகர் பாவிகளாயிருந்த பழைய நிலைமையை விட்டுத் திரும்பினார்கள். ஆனால், அவர்கள் பரிசுத்தவான்கள் என்ற நிலைமைக்கு வரவில்லை (1 கொரி 1:2) அவர்கள் பக்திமான்கள் என்ற நிலைமைக்கு வந்தார்கள். இது இரும்பு பித்தளை ஆவது போலவும், வெண்கலம் ஆவது போன்றது. சாதாரண இரும்பு பித்தளை ஆனது பெரிய விஷயம்தான். சாதாரண இரும்பு வெண்கலம் ஆனது

“ நாம் பித்தளை ரகமான ஆவிக்குரிய அனுபவத்தை வைத்துக் கொண்டு, பிறரை அவ்விதம் மாறிட அழைப்பது மேன்மையானது அல்ல. நாம் தங்கமாக மாற வேண்டும். நாம் விலையேறப் பெற்றவர்களாக மாறவேண்டும். ”

பெரிய விஷயம்தான். அதுபோல, ஒருவர் பாவி என்ற நிலைமையிலிருந்து பக்தி மான் என்ற நிலைமைக்கு வந்தது பெரிய விஷயம்தான்.

ஆனால், இதுவல்ல தேவனுடைய விருப்பம். நாம் இரும்பு என்ற சாதாரண நிலையிலிருந்து தங்கம் என்ற நிலமைக்கு வரவேண்டும். நாம் இரும்பைவிட சற்று தரம் உயர்ந்த இன்னொரு உலோகமாக மாறுவது அல்ல. நாம் இரும்பு என்ற அற்ப நிலைமையிலிருந்து தங்கமாக வேண்டும். பாவி என்ற பழைய நிலையை விட்டு, கர்த்தரால் தேவனுடைய பிள்ளை என்ற உயர்ந்த உன்னத நிலைமைக்கு வருவதே தேவ நோக்கம். (யோவான் 1:12)

பாவி பக்தியாக வாழத் துவங்குவது பெரிய விஷயமே. நாம் சபைக்குப் போவது பெரிய விஷயமே. ஆராதனை செய்வது பெரிய விஷயமே. ஜெபம் செய்வது பெரிய விஷயமே. ஊழியம் செய்வது பெரிய விஷயமே. தப்பு தவறு செய்யாமல் வாழ்வது பெரிய விஷயமே. ஆனால், இவை எல்லாம் இரும்பிலிருந்து பித்தளையாகும் அனுபவமே. ஆனால், நாம் பரிசுத்தவான்கள் என்ற உயர்ரகத் தங்கமாக மாற வேண்டும். அதுதான் தேவனுடைய வல்லமை. அதுதான் தேவனுடைய மகிமை. அதுதான் ஆச்சரியமான தேவ செயல். அப்படிப்பட்ட ஒரு அனுபவத்திற்கு நாம் வந்து, நம்மைப் போல பிறரும் அந்த அனுபவத்திற்கு வரவேண்டுமே என்று ஆசைப்படுவது தான் உண்மையான ஆத்தும பாரம்.

நான் இப்போது சண்டை போடுவதில்லை. நான் இப்போது சினிமா தியேட்டர் போவதில்லை. நான் இப்போது மதுபானம் அருந்துவதில்லை. நான் இப்போது யாரையும் ஏமாற்றுவதில்லை. நான் இப்போது தவறாக யாருடனும் பழகுவதில்லை. இது போல, நாம் ஏராளம் சொல்லலாம். இவை யாவும் மெச்சத் தகுந்த விஷயங்களே. இவை பாராட்டத் தக்க மாற்றங்களே. ஆனால், இவை யாவும் இரும்பு பித்தளையாக மாறினது போன்ற ஒரு அனுபவமே. ஆனால், இது போன்ற ஒரு அனுபவத்தை அல்ல தேவன் தர விரும்புகின்றார். அது இரும்பு தங்கமாக மாறுவது போன்றதோர் அனுபவம்.

அதைத்தான் நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற வேண்டும். என்னைப் போல இன்னொருவரைப் பக்தியாக வாழ்வதற்கு அழைப்பது அல்ல. என்னைப் போல இன்னொருவரை பரிசுத்தவானாக வாழ்வதற்கு அழைப்பதே ஆத்தும வாஞ்சை. இருளைப் போல இருந்த நாம், இப்போது தேவ ஆவியினால் வெளிச்சமாக மாறுகின்றோம். (மத்தேயு 5:14) சகேயு இயேசுவால் சந்திக்கப்பட்டபோது வெறும் பக்தனாக மாறவில்லை. தன்னுடைய கடந்த கால வாழ்வைச் சிந்தித்து மாபெரும் மன மாற்றம் கண்டான். தன்னுடைய ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கின்ற அளவிற்கு வந்தான்.

இன்று நாம் பித்தளை ரகமான ஆவிக்குரிய அனுபவத்தை வைத்துக் கொண்டு, பிறரை அவ்விதம் மாறிட அழைப்பது மேன்மையானது அல்ல. நாம் தங்கமாக மாற வேண்டும். நாம் விலையேறப் பெற்றவர்களாக மாற வேண்டும். அந்த மாற்றம் நமக்குள் ஒரு பெரிய நிறைவைத் தரவேண்டும். அப்போது பிறரையும் அவ்விதம் மாறிட அழைப்பது, உண்மையான ஆத்தும பாரமாக இருக்கும்.

எத்தனை தவறு செய்தாலும் விலகாத அபிஷேகமா?

"தேவ ஊழியர்கள் என்ற பேரில் வந்துவிட்டால், அவர்களிடம் காணப்படும் திறமைகள் யாவற்றையும், அபஷேகத்தின் பிரதிபலிப்புகள் என்று கண்ணைமூடிக் கொண்டு நம்பும் மனநிலை மாற வேண்டும். தனிப்பட்ட சாட்சி வாழ்க்கையும், வலிமையான சத்திய வார்த்தைகளும் இல்லாதோரிடம் செயல்படுவது தேவ அபிஷேகம் அல்ல. அது மனிதத் திறமைகளே என்பதைப் பகுத்தறிய வேண்டும்."

தேவ ஊழியர்களிடம் காணப்படும் திறமைகளுக்கும், தேவன் அருளும் அபிஷேகத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள இயலாதது, இன்றைய கிறிஸ்தவர்களின் மிகப் பெரிய ஒரு பலவீனம் ஆகும். ஒருவர் தேவ ஊழியம் என்ற களத்தில் வெளிப்படுத்தும் அல்லது பயன்படுத்தும் எல்லாத் திறமைகளையும் ஆற்றல் களையும், தேவ அபிஷேகத்தின் விளைவு கள் என எண்ணுவது ஒரு கிறிஸ்தவ மூட நம்பிக்கை

தேவ ஊழியர், பாஸ்டர், சுவிசேஷகர் என்ற பெயர்களில் வருகின்றவர்களிடம்

பாடல் திறமை, இசைக்கருவி இயக்கும் திறமை, பேச்சுத் திறமை, நிர்வாகத் திறமை, ஆராதனை நடத்தும் திறமை, போதனைத் திறமை என பல திறமைகள் காணப்பட முடியும். அவை யாவற்றையும் கண்ணை மூடிக் கொண்டு அபிஷேகம் அபிஷேகம் என கூறுவது பல கிறிஸ்தவர் களின் வழக்கமாயிருக்கின்றது.

தாலந்துகளா? அபிஷேகமா ?

சில தேவ ஊழியர்கள் தவறுகின் றார்கள். சிலர், பாவத்தில் விழுகின்றனர். சிலர், பண ஆசைக்குப் பலியாகின்றனர். சிலர், இச்சைகளால் இழுப்புண்டு போகின்றனர். சிலர், ஆடம்பர வாழ்விற்கு அடிமையாகின்றனர். சிலர், தீய சுபாவங் களுக்கு இசைந்து போய் முரட்டாட்டமாய் வாழ்கின்றனர். இவர்களின் மாய்மால மான வாழ்க்கை பலருக்குத் தெரியவரு கின்றன. இவர்கள் கர்த்தருக்கு விரோத மாகச் செயல்படுவது வெளியரங்க மாகத் தெரிகின்றது.

ஆயினும், இவர்களைப் பலர் இன்னும் ஆதரிக்கவும், பாராட்டவும், பயன்படுத்தவும் செய்கின்றனர். ஏனென்றால், அவர்கள் அவர்களிடம் அபிஷேகம் இருப்பதாக நம்புகின்றனர். எப்படி அந்த நம்பிக்கை வந்தது? எத்தனை தவறுகள் அவர்கள் செய்து எத்தனை குற்றசாட்டுகள் எழுந்தாலும், அவர்களிடம் உள்ள ஆற்றல்கள் போகவில்லை. அவர்கள் இன்னும் தொடர்ந்து சிறப்பாகப் பாடு கின்றனர். அவர்கள் இன்னும் பலர் ரசிக்கும் விதமாக நடன ஆராதனை நடத்துகின்றனர். அவர்கள் இன்னும் மேடையில் ஆராதனைத் தலைவராக வந்து நின்று, அபிஷேகம் அபிஷேகம் என்று அதிகம் பேசுகின்றனர். அவர்கள் இன்னும் பரவசமான பிரசங்கம் செய்கிறார்கள். அவர்கள், இன்னும் மிகத் திறமையாக ஊழியம் செய்கின்றார்கள். அவர்கள் இன்னும் அநேகரைப் பரவச மனக்கிளர்ச்சி அடையச் செய்கின்றனர்.

எனவே, இவற்றை அவர்கள் தேவ அபிஷேகச் செயலாக நம்பி, அவர்களின் தவறு நிறைந்த வாழ்க்கையைப் பெரிய விஷயமாக எண்ணவில்லை. அவர்கள் என்ன தவறு செய்தாலும், கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த அபிஷேகம், இன்னும் கிரியை செய்கிறதே என்று அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால் உண்மை என்ன? அவர்களிடம்

“ தேவ அபிஷேகம் என்பது ஒருவருடைய திறமைகளில் அல்ல. அது அவருடைய வாழ்க்கை முறையிலேயே வெளிப்படும். ஒரு தேவ ஊழியரின் தேவ அபிஷேகத்தை அவர் வாழ்கின்ற வாழ்க்கையிலும், அவர் பேசுகின்ற தரமான சத்தியத்திலுமே பார்க்க வேண்டும். ”

நீங்காமல் செயல்படுவது தேவ அபிஷேகம் அல்ல. அது அவர்களின் இயற்கைத் தாலந்துகள். ஒரு மனிதனுடைய திறமையோ, அறிவோ, ஞானமோ, ஆற்றலோ அந்த மனிதன் செய்யும் பாவங்களால் நீங்கிப் போவதில்லை.

இன்று பல தேவ ஊழியர்கள் தேவ அபிஷேகத்தால் ஊழியம் செய்யவில்லை. அவர்கள் இயற்கைத் திறமைகளைக் கொண்டே ஊழியம் செய்கின்றனர். அவர்களின் பாடல் திறமைகளுக்கும், நடனத் திறமைகளுக்கும், பேச்சுத் திறமைகளுக்கும், ஆராதனை நடத்தும் திறமைகளுக்கும், இசைக்கருவி இயக்கும் திறமைகளுக்கும், நிர்வாகத் திறமைகளுக்கும் தேவ அபிஷேகத்திற்கும் சம்பந்தமேயில்லை. எனவேதான், அவர்கள் தவறுகளில் தொடர்ந்தாலும், ஆடம்பர வாழ்வில் தொடர்ந்தாலும், இச்சைகளில் விழுந்தாலும், பண ஆசைப் பாவங்களுக்கு அடிமையானாலும் அவர்களிடம் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருந்த எந்தத்திறமையும் நீங்கிப்போவதில்லை.

ஒருவருடைய திறமைகளைத் தேவ அபிஷேகம், தேவ நோக்கத்திற்கு ஏதுவாகப் பயன்படுத்த முடியும். ஆயினும், தேவ அபிஷேகம் என்பது ஒருவருடைய திறமைகளில் அல்ல. அது அவருடைய வாழ்க்கை முறையிலேயே வெளிப்படும். ஒரு தேவ ஊழியரின் தேவ அபிஷேகத்தை அவர் வாழ்கின்ற வாழ்க்கையிலும், அவர் பேசுகின்ற தரமான சத்தியத்திலுமே பார்க்க வேண்டும். தேவ ஆவியின் அபிஷேகம் என்பது முதலாவது ஒரு ஊழியரின் சுபாவங்களையும், செயல்களையும், பழக்க வழக்கங்களையும், அவர் பேசுகின்ற வார்த்தைகளையும் பாதிப்பதாகும்.

சாட்சி வாழ்க்கை இல்லாத அபிஷேகம்

ஒரு தேவ ஊழியரின் சுபாவங்களிலும், பிற செயல்பாடுகளிலும், வாழ்கின்ற விதங்களிலும் தேவ ஆவியின் வல்லமையும், மகிமையும் வெளிப்படாவிட்டால் அவருடைய திறமைகள் அபிஷேகம் உடையதல்ல. சினிமா கலைஞர்களைப் பாருங்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சியாளர்களைப் பாருங்கள். இவர்களிடம் எவ்வளவோ திறமைகள் கொட்டிக்கிடக்கின்றன. எத்தனை எத்தனை விதங்களில் பல்லாயிரங்களைக் கவர்ந்திழுக்கும் விதமான திறமைகளை வெளிப்படுத்துகின்றார்கள். இவர்கள் எப்படி வாழ்ந்தாலும், எப்படி நடந்தாலும் அந்தத் திறமைகள் குறைவில்லாமல் வெளிப்படும்.

அதுபோலவே, ஒருவரிடமுள்ள இயற்கைத் தாலந்துகள் அவரிடம் தேவ அபிஷேகம் இல்லாவிட்டாலும் செயல்படும். அவர் எத்தனைதான் பாவம் செய்தாலும் அவை செயல்படும். அவை ஆவிக்குரிய நிறம் பூசப்பட்டுச் செயல்படுத்தப்படும் போது, அதனை தேவ அபிஷேகம் என நினைப்பது அபிஷேகத்தைக் கொச்சைப்படுத்தும் செயலாகும். அபிஷேகம் என்பது முதல் பகுதியில் தேவ ஊழியம் செய்கின்றவரின் தனிப்பட்ட சாட்சி வாழ்க்கையில் வெளிப்பட வேண்டும். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்றாலும், ஊழிய அபிஷேகம் என்றாலும், முதலாவது அதனுடைய செயல்பாடு, சம்பந்தப்பட்ட நபரை ஒரு தேவ மனிதனாக நிறுத்துவதாகும். அந்த மனிதன் தன்னுடைய சுபாவங்களாலும் நடத்தைகளாலும், பழக்கங்களாலும், வாழ்கின்ற விதத்தாலும் தேவனுடைய தெய்வீக மகிமையை வெளிப்படுத்த வேண்டும்.

✤✤✤

கிறிஸ்துவைப் பிரதி பலிக்கும் விதமான உயர்ந்த ரகமான வாழ்க் கையை வாழ்வதற்கு, ஏதுவான தூண்டுதலைத் தருகின்ற வார்த்தைகள் இல்லாவிட்டால், அங்கே அபிஷேகம் இல்லை.

✤✤✤



(11 கொரிந்தியர் 3:18) அந்த மனிதன் அந்த அபிஷேகத்தால் தான் எதைச் செய்தாலும் தேவன் மகிமைப்படுகின்ற விதமாகச் செய்ய வேண்டும். (கொலோசெயர் 3:17) தன்னைப் பரிசுத்தமான ஒரு வாழ்க்கைக்குச் சாட்சியாகவும், மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும் நிறுத்தத் தவறும்போது, அந்த நபரிடம் ஊழியத் தகுதியோ, ஊழிய அபிஷேகமோ இல்லை என்பதே உண்மை.

ஆனால், அந்த மனிதன் பல்லாயிரங்கள் ரசிக்கும் ஆன்மிகப் பாடலைப் பாடலாம். அது அபிஷேகம் அல்ல. அது மனிதத் திறமை. அந்த மனிதன் பல பல பாவங்களோடு வாழ்ந்துகொண்டே மேடையில் ஆராதனை நடத்தி அநேகரைப் பரவசப்படுத்தலாம். அது அபிஷேகம் அல்ல, திறமை. இரண்டாவதாக தேவ அபிஷேகம் பெற்றவனிடம், தேவ வார்த்தை இருக்க வேண்டும். ஊழிய அபிஷேகம்பெற்றவனிடம்மனிதர்களைக் கர்த்தருக்கேற்றவிதமாகக் கட்டியெழுப்பும் சத்திய வார்த்தை இருக்க வேண்டும்.

சிறந்த சொற்பொழிவு அல்ல, ரசனைமிக்க பரவச வார்த்தைகள் அல்ல, பரவசமான பிரசங்கங்கள் அல்ல, ஒரு மனிதனைத் தேறினவனாக மாற்றுவதற்கு ஏற்றவிதமான சத்திய வார்த்தை ஒருவரிடம் இருக்க வேண்டும். (கொலோசெயர் 1:28) தேவ அபிஷேகத்துடன் பேசுகிறவனிடம் ஒரு மனிதன் தன்னை உணரும்படியான வார்த்தைகள் இருக்க வேண்டும். கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் விதமான உயர்ந்த ரகமான வாழ்க்கையை வாழ்வதற்கு, ஏதுவான தூண்டுதலைத் தருகின்ற வார்த்தைகள் இல்லாவிட்டால், அங்கே அபிஷேகம் இல்லை.

ஆம். தேவ ஊழியர்கள் என்ற பேரில் வந்துவிட்டால், அவர்களிடம் காணப்படும் திறமைகள் யாவற்றையும், அபிஷேகத்தின் பிரதிபலிப்புகள் என்று கண்ணைமூடிக் கொண்டு நம்பும் மனநிலை மாற வேண்டும். தனிப்பட்ட சாட்சி வாழ்க்கையும், வலிமையான சத்திய வார்த்தைகளும் இல்லாதோரிடம் செயல்படுவது தேவ அபிஷேகம் அல்ல. அது மனிதத் திறமைகளே என்பதைப் பகுத்தறிய வேண்டும்.

✪✪✪

யாரையும் குறை கூறக் கூடாதா? சில விளக்கங்கள்

“ ஒரு விஷயத்தைக் குறித்த சரியான உண்மையை அறிந்தவன் அந்த விஷயம் வேறொருவிதமாகக் காண்பிக்கப்படும் போது மௌனமாயிருப்பது கடினம். பரிசுத்தாவியைப் பெற்று அந்த ஆவியால் வழி நடத்தப் படுகின்ற ஒருவனுக்குச் சத்தியத்திற்கு விரோதமான காரியங்கள் ஆழமான உறுத்தலை ஏற்படுத்தும். எனவே, அவன் அது தொடர்பாகச் சும்மாயிராமல் எதிர்த்து நிற்பது இயல்பான காரியம். ”

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருக்க இயேசு சொன்னார். (மத்தேயு 7:15) நீங்கள் எல்லா ஆவியையும் நம்பிவிடக்கூடாது என்ற எச்சரிப்பை யோவான் மூலமாகப் பெறுகின்றோம். (1யோவான் 4:1) இப்பொழுதும் இங்கு ஏராளம் அந்தி கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள் என்று யோவான் எச்சரிப்பதை 1 யோவான் 4:3-ல் பார்க்கின்றோம். உங்கள் நடுவிலும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள் என்று பேதுரு தரும் தகவலை 2 பேதுரு 2:1-ல் பார்க்கின்றோம். மந்தையைத் தப்ப விடாத ஓநாய்கள் வரும் என்ற எச்சரிப்பை பவுல் வழியாகப் பெறுகின்றோம். (அப்போஸ்தலர் 20:29)

இவ்விதமான ஏராளமான வசனங்களை வேதாகமத்தில் வாசிக்கின்றோம். அப்படியானால், நம் நடுவில் கள்ளப் போதகர்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள அப்போஸ்தலர்களும் இருப்பார்கள் என்றுதானே பொருள். அப்படியிருந்தால் அவர்களைக் குறித்த எச்சரிப்புகளைக் கொடுக்க வேண்டியது தேவ ஊழியனின் கடமைதானே. ஆனால், அவ்விதமான காரியங்களை தேவ ஊழியனாக நின்று எச்சரிக்கும் போது பிற ஊழியர்களை எப்படிக் குறை சொல்லலாம். பிற ஊழியங்களுக்கு எதிராக எப்படிப் பேசலாம் என்ற கேள்விகள் வருகின்றது.

தவறான போதனைகள், தவறான ஊழியங்கள், தவறான ஊழியர்கள் தொடர்பான காரியங்களை, வேத அடிப்படையில் சுட்டிக் காட்ட வேண்டியது தேவனுடைய ஊழியனின் மிக முக்கியமான கடமைகளுள் ஒன்று. (ஏசாயா 58:1, எசேக்கியேல் 13:2) யாரையும் குறை கூறக்கூடாது என்றும், எந்த ஊழியத்தைக் குறித்தும் எதையும் சொல்லக்கூடாது என்றும் எண்ணுகின்றவர்கள் கீழ்கண்ட சில விளக்கங்களைக் கவனிப்பது நல்லது.

“ இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் ஏராளமான உபதேசங்களும், பாரம்பரியச் செயல்பாடுகளும் தவறானவை. ஆனால், அவை உரிய விதமாகத் தவறு என்று காட்டப்படாததால், அவை இப்போது பலரால் வேத சட்டமாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டது. ”

தேவ ஊழியன் ஒரு காவற்காரன்

தேவ ஊழியன் என்பவன் தேவனால் நியமிக்கப்படும் ஒரு காவற்காரன். (எசேக்கியேல் 33:7) அவன் தேவனுடைய வாயிலிருந்து வார்த்தைகளைக் கேட்டு எச்சரிக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவன். (எசேக்கியேல் 33:7) அவன் எச்சரிக்கும் போது தவறானவைகளையும், முரண்பாடானவைகளையும், வேதத்திற்கு எதிரானவைகளையும் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை வரும். அதனைக் குறை சொல்வதாக எடுத்துக் கொண்டு, பிற ஊழியர்களையும் ஊழியங்களையும் எப்படி குற்றங் கூறலாம் என்று கேட்பது தேவனுடைய நியமனத்திற்கு எதிரான ஒரு செயலே.

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் நாட்களில் தேவன் சிலருடைய சில தவறான செயல்பாடுகளை எசேக்கியேலுக்குக் காண்பித்தார். (எசேக்கியேல் 8:6) அவற்றைக் காண்பித்து அவர்கள் செய்கிறதைக் காண்கிறாயா என்றார். இவ்விதம் தவறான விதமான ஊழியச் செயல்பாடுகளை தேவன் காவற்காரனாக நியமித்த ஊழியர்களுக்குக் காண்பிப்பார். எனவே, தவறானவைகளைச் சுட்டிக் காட்டாமல் போவதுதான் பாவமேயன்றி, சுட்டிக் காட்டி எச்சரிப்பது பாவம் அல்ல.

கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்ற வாதம் சரியா?

சிலர், பல ஊழியர்கள் தவறாகப் போதிப்பதும், செயல்படுவதும் உண்மைதான். ஆனால், நாம் அவற்றைக் குறித்துப் பேசக்கூடாது, தேவன் பார்த்துக் கொள்வார் என்று கூறுவார்கள். தேவன் சரியானதைப் பேசுவதற்கு ஊழியர்களை நியமிப்பதோடு தவறானவைகளைச் சுட்டிக்காட்டவும் ஊழியர்களை நியமிக்கின்றார். எரேமியாவை தேவன் ஊழியத்திற்கு அழைத்த போது கட்டவும் நாட்டவும் மட்டும் அல்ல. பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், அவனை அழைத்தார். சரியானவைகளைக் கட்டுவதும் ஊழியனுடைய வேலைதான். சரியற்றவைகளைப் பிடுங்குவதும், இடிப்பதும்கூட அவ

“

தவறானவைகளும், முரண்பாடானவைகளும், வேத அடிப்படையற்றவைகளும் பொதுவாக எல்லோரும் அறியும் விதத்திலேயே பரப்பப்படுகிறது. பொது வெளியில் பரப்பப்பட்ட தவறான விஷயங்களைப் பொது வெளியில் சென்றுதான் தவறு என்று சொல்லியாக வேண்டும்.

”

னுடைய கடமைதான். எரேமியா 1:10) ஆம். தேவன் பார்த்துக் கொள்வார். நாம் யாரைக் குறித்தும் பேசக்கூடாது என்பது தேவனிடத்திலிருந்து வருகிற சிந்தனை அல்ல.

சரியற்றவைகளைச் சரியற்றவை என சொல்லாவிட்டால்

சரியற்றவைகளைச் சரியற்றவை என தேவ ஊழியர்கள் சொல்லாவிட்டால் அதற்கு மறைமுகமான ஆதரவும் அங்கீகாரமும் கொடுத்ததாக ஆகிவிடும். வேத அடிப்படையற்றவைகளும், சத்தியம் சாராதவைகளும் உரிய விதமாகச் சுட்டிக்காட்டப்படாவிட்டால், அவை சரியானவைதான் என்ற அந்தஸ்தை விரைவில் பெற்றுவிடும். இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் ஏராளமான உபதேசங்களும், பாரம்பரியச் செயல்பாடுகளும் தவறானவை. ஆனால், அவை உரிய விதமாகத் தவறு என்று காட்டப்படாததால், அவை இப்போது பலரால் வேத சட்டமாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டது. எனவே தான், அப்போஸ்தலனாகிய பவுல் ஆரோக்கியமான உபதேசங்களைப் போதிக்கச் சொன்னதோடு, எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் சொன்னான். (தீத்து 1:9)

சத்தியத்திற்கு எதிரானவைகள் உறுத்தும்

சத்தியத்தைப் புரட்டுகின்றவர்கள் பலர். தவறானவைகளைச் சரியானவைகளைப் போல காண்பிப்பவர்கள் பலர். வேத அடிப்படைகளை விட்டு ஜனங்களை விலகிப் போக வைத்து தங்களின் சுயலாப நோக்கங்களை நிறைவேற்றுகின்றவர்கள் பலர். இது போன்ற விஷயங்கள் உண்மையான சத்தியத்தை அறிந்தவனை உறுத்தாமல் இருக்க முடியாது. ஒரு விஷயத்தைக் குறித்த சரியான உண்மையை அறிந்தவன் அந்த விஷயம் வேறொருவிதமாகக் காண்பிக்கப்படும் போது, மௌனமாயிருப்பது கடினம். பரிசுத்தாவியைப் பெற்று அந்த ஆவியால் வழிநடத்தப்படுகின்ற ஒருவனுக்குச் சத்தியத்திற்கு விரோதமான காரியங்கள் ஆழமான உறுத்தலை ஏற்படுத்தும். எனவே, அவன் அது தொடர்பாகச் சும்மாயிராமல் எதிர்த்து நிற்பது இயல்பான காரியம். கலாத்திய திருச்சபை மக்களைத் தவறான ஒரு உபதேசம், தவறாக நடத்திய போது அப்போஸ்தலனாகிய பவுலால் சும்மாயிருக்க முடியவில்லை. எனவே, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவன் என்று பவுல் எழுத நேரிட்டது (கலாத்தியர் 1:9)

தனிப்பட்ட முறையில் சொல்ல முடியாது

சிலர் ஊழியத்திலோ, உபதேசத்திலோ தவறுகள் இருந்தால் சம்பந்தப்பட்டவர்களைத் தனியாகப் பார்த்துச் சொல்ல வேண்டியதுதானே என்பார்கள். ஒரு ஊழியக்காரனுடைய தனிப்பட்ட வாழ்க்கை வட்டத்தில் தவறானவைகளைக் கண்டால் அப்படிச் செய்யலாம். ஆனால், ஒரு சரியற்ற உபதேசமோ, போதனையோ, ஊழிய முறையோ அநேகருக்கு எதிரான ஒரு தவறு. அதனால் அநேகர் ஆவிக்குரிய ரீதியாகப் பாதிக்கப்படுவார்கள். எனவே, தவறானவைகளால் அநேகர் இடறிப் போக நேரிடும் போது, அவர்கள் காது கேட்கத்தான் அது தொடர்பாகப் பேச வேண்டும். ஒரு உணவுப் பொருளில் சரீர நலனுக்கு எதிரான அம்சம் இருந்தால், அதனை உபயோகிக்கும் மக்களுக்குத்தான் எச்சரிப்புக் கொடுக்க வேண்டும். அனனியா என்ற கள்ளத்தீர்க்கதரிசி கள்ளத் தீர்க்கதரிசனம் உரைத்தபோது, எரேமியா அது பொய்யானது என்பதைக் கண்டான். எரேமியா அவனை தனியாக அழைத்துப்

பேசாமல், எல்லா ஜனங்களின் காதுகள் கேட்கும் விதமாக அவனை எச்சரித்தான். (எரேமியா 28:7)

பொது வெளியில் பேசுவது அவசியம்

சிலர், கிறிஸ்தவ காரியங்களைக் குறித்த விமர்சனங்களைப் பொது வெளியில் எழுப்பினால், அது பலர் அறிய நேர்ந்து இடறுதல் ஏற்படுமே என்பார்கள். ஆனால், இது தவிர்க்க முடியாதது. விமர்சனம் என்பது தனிநபரைக் குறிவைத்து அல்ல. அது பலரைப் பாதிக்கும் விஷயமாயிருப்பதால் அதனைப் பொது வெளியில் எழுப்ப வேண்டியது அவசியமாகிறது. தவறானவைகளும், முரண்பாடானவைகளும், வேத அடிப்படையற்றவைகளும் பொதுவாக எல்லோரும் அறியும் விதத்திலேயே பரப்பப்படுகிறது. பொது வெளியில் பரப்பப்பட்ட தவறான விஷயங்களைப் பொது வெளியில் சென்றுதான் தவறு என்று சொல்லியாக வேண்டும். கிறிஸ்தவரல்லாதவர்களும் அதனை அறிய நேரிடுமே என்ற காரணத்தைக் காட்டி மௌனமாயிருந்தால், பொது வெளியில் விதைக்கப்பட்ட சத்திய விரோத விஷயங்கள் எதிர்ப்பின்றி அநேகரைப் பாதிக்க நேரிடும்.

★★★★

NEWS வெளிநாட்டுச் செய்திகள்

- 32-வது ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் ஜப்பான் டோக்கியோவில் ஜுலை 23 முதல் 17 நாட்கள் நடைபெற்றன. இந்த விளையாட்டுப் போட்டிகளோடு தொடர்புடைய சுமார் 200 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். 205 நாடுகள் இந்த போட்டிகளில் கலந்து கொண்டன. 11000-க்கும் அதிகமான வீரர்களும் வீராங்கனைகளும், 33 வகையான விளையாட்டுகளில் பங்கேற்றனர். அமெரிக்கா வழக்கம் போல பதக்கங்கள் பெறுவதில் முதலிடத்தை பிடித்தது. 39 தங்கம் உட்பட 113 பதக்கங்களைப் பெற்றது. சீனா 38 தங்கம் உட்பட 88 பதக்கங்கள் பெற்றது. இந்தியா மொத்தம் 7 பதக்கங்கள் பெற்று அரியானாவை சேர்ந்த நீரஜ் சோப்ரா தடகள ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்று இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்தார்.

- அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த தாலிபான்கள் அமெரிக்காவினால் விரட்டியடிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து ஜனநாயக ஆட்சி வந்தது. ஆயினும் தாலிபான்கள் என்னும் பயங்காரவாத அமைப்பு திரும்பவும் வலுப்பெற்று கடந்த 20 ஆண்டுகளாக அரசை எதிர்த்துப் போராடி வருகின்றன. இந்நிலையில் அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானத்திலிருந்து வெளியேறின. இந்நிலையில் தாலிபான் பயங்கரவாத அமைப்பின் படைகள் இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டு தொடர்ந்து ஜெயித்து வருகின்றன.

- அமெரிக்காவில் சட்டப்பூர்வமாகக் குடியேறியவர்களின் பிள்ளைகளுக்கு அமெரிக்க குடியுரிமை தருவதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் எடுத்து வருவதாகக் கூறப்படுகிறது. 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் அமெரிக்காவில் பெற்றோரைச் சார்ந்து வாழ முடியாது. எனவே, அவர்கள் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்படலாம் என்ற அச்சம் நிலவிய நிலையில் இவ்விதமான செய்தி வந்துள்ளது.

மற்றவர்களின் பார்வைக்கு ஏற்ற தோற்றம்

“ உலகம் நம்மிடம் உலகத்திற்கேற்ற தோற்றத்தைத் தான் நாகரீகமாகவும், மதிப்பிற்குரியதாகவும் பார்க்கும். ஆனால், இந்த ஒழுக்கமறியாத உலகத்திற்கு நாம் ஒழுக்கத்தை விரும்புகின்றவர்கள் என்பதைக் காட்ட வேண்டும். நவ நாகரீகமான ஒரு தோற்றத்தைவிட யாருக்கும் இடறலற்றதும், முன்மாதிரிக்கு ஏற்றதானதுமான ஒரு தோற்றத்தைதான், நாம் மேன்மையாக எண்ணுகின்றோம் என்பதைக் காட்ட வேண்டும்.”

நாம் நன்றாக ஆங்கிலம் பேசத் தெரிந்தால் அதனை மேன்மையாக எண்ணுகின்றோம். நாம் நவநாகரீகமாகக் கவர்ச்சிக்கும் விதமாக உடைகள் அணிந்தால், மேன்மையாக எண்ணுகின்றோம். நாம் நிறைய ஆபரணங்களை வாரி அணிந்து கொண்டு தோன்றுவதை, மேன்மையாக எண்ணுகின்றோம். நாம் இந்த உலகத்திற்கேற்றவிதமான ஒரு நவீன கேச அலங்காரத்தையோ, முக அலங்காரத்தையோ செய்து தோன்றினால், மேன்மையாக எண்ணுகின்றோம்.

நாம் நல்ல வசதியும், ஆடம்பரமும் உடைய மேட்டுக்குடி மக்களுடன் தொடர் புடையவர்களாக இருப்பதை, மேன்மை யாக எண்ணுகின்றோம். நாம் பலர் நடு வில் பலர் ரசிக்கத்தக்க திறமைகளை வெளிப்படுத்துவதை மேன்மையாக எண் ணுகின்றோம். மொத்தத்தில் நாம் இந்த நவநாகரீக உலக மனிதர்களின் நடுவில், அவர்களுக்கொத்த ஒரு நபராகக் காட்சி அளித்தால், நாம் திருப்தி அடைகிறோம். நமக்கு ஒரு சமூக அந்தஸ்து கிடைத் திருப்பதாக எண்ணுகின்றோம்.

பிறர் பார்வைக்கு

நமக்கொரு உண்மை தெரிய வேண்டும். நாம் நன்றாக உடுத்து, நன்றாக முக ஒப்பனை செய்து, சிறப்பாக ஹேர் ஸ்டைல் பண்ணி, நம்மைக் கண் ணாடிக்கு முன்பாக நின்று பார்க்கும் போது அது யாருக்காக? நமக்காக அல்ல. நம்மைப் பார்க்கப்போகின்றவர்களுக் காக. யாரைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை என்று சொல்லுவோம். ஆனால், அது பொய். நமக்கு எல் லோரைப் பற்றியும் கவலை இருக்கிறது. மற்றவர்கள் நம்மை நல்ல தோற்றத் தோடும், நல்ல அந்தஸ்தோடும் பார்க்க வேண்டுமே என்ற கவலையோடுதான் அவ்விதம் செய்கின்றோம். வீட்டில் இருக்கும்போது யாரும் கோட்டுசூட் போட்டுக் கொண்டிருப்பதில்லை. வீட்டில் இருக்கும் போது யாரும் நிறைய நகை களை வாரி அணிந்து கொண்டிருப்ப தில்லை. வீட்டிலிருக்கும்போது அதி நவீனக் கவர்ச்சிகரமாக ஆடைகளை அணிந்து கொண்டிருப்பதில்லை.

யாராவது நம் இல்லத்திற்கு வரும் போதும், நாம் வீட்டிற்கு வெளியே போகும் போதும், நாம் அவ்விதம் தோன்றுகின் றோம். ஏனென்றால், மற்றவர்கள் நம்மை நல்ல ஒரு நிலைமையில் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தினால். நவ நாகரீக உடை, நவநாகரீக ஒப்பனை, நவநாகரீக ஸ்டைல், நவநாகரீக உரை யாடல்கள் என ஏராளம் விஷயங்கள் மற்றவர்கள் நம்மை நல்ல நிலைமையில் இருப்பதாகப் பார்ப்பதற்கே.

> “ நாம் மற்றவர்களின் பார்வையில் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க ஒரு சமுதாய அந்தஸ்தோடு காணப்படத்தான், பல சிரமங்களையும் அசௌகரியங்களையும் ஏற்கின்றோம். ”

நவீன உலகத்தில் சிலர், மிதமிஞ்சிய நாகரீகப் பாணியில் கவர்ச்சி காட்டி உடை அணிந்தும், அளவுக்கு மிஞ்சி ஒப்பனை செய்தும் மக்கள் நடுவில் செல்வார்கள். ஆனால், யாராவது தங்களைச் சற்று உற்றுப் பார்த்தாலோ, திரும்பிப் பார்த் தாலா அவர்களை, சே! இவர்களெல்லாம் என்ன மனிதர்கள், என்று சொல்வார்கள். ஆனால், இவர்கள் மற்றவர்களின் கவனம் தங்கள் பக்கமாகத் திரும்புவதை விரும்பித்தான், அவ்விதம் ஒப்பனை செய்யவும், உடுக்கவும் செய்கிறார்கள் என்ற உண்மையை ஏற்பதில்லை.

ஆம். இந்த சமுதாயத்தின் நடுவில் நாம் தாழ்வாகப் பார்க்கப்பட்டுவிடக் கூடாது என்றும், நல்ல அந்தஸ்தாகப் பார்க்கப்படாமல் போய்விடக்கூடாது என் பதற்காகத்தான், நாம் அதிகமதிகமாக இன்னும் நவநாகரீகத் தோற்றத்தை ஏற் படுத்தச் சிரமப்படுகின்றோம். சிலர், சில வகைக் காலணிகளை அணிந்து கொண்டு, நெருப்பின்மேல் நடப்பது போல மிகவும் சிரமப்பட்டுத்தான் நடக் கின்றனர். சிலர், கவர்ச்சியான உடைகளை மிக மிக அசௌகரியமாக உணர்ந்து கொண்டுதான் அணிகின்றனர். சிலர்

ஒழுக்கம், அடக்கம், கனத்திற்குரிய தோற்றம் போன்றவற்றை அசட்டை செய்யும் மனிதர்களின் அங்கீகாரம் நமக்கு அவசியமல்ல. ஒட்டு மொத்த உலகத்துக்கு ஏற்றவர்களா யிருப்பதைவிடப் பரிசுத்தத்தை எதிர்பார்க்கும் தேவனுக்கு முன்பாக, அவருக்கு ஏற்றவர்களாயிருப்பதே மேன்மையானது.



தங்களை மிக மிக அதிகமாக வருத்தப் படுத்தித்தான் பிறருக்கு முன்பு நாகரீ மாகத் தங்களைத் தோன்ற வைக்கின் றனர். எதற்காக? சிரமப்பட்டாவது பிறர் நடுவில் தாங்கள் ஒரு நாகரிகமும் அந்தஸ்துமான நிலையில் தோன்ற வேண்டும் என்பதற்காகத்தான். சுருக்க மாகச் சொல்வதென்றால் நாம் மற்ற வர்களின் பார்வையில் ஏற்றுக் கொள்ளப் படத்தக்க ஒரு சமுதாய அந்தஸ்தோடு காணப்படத்தான், பல சிரமங்களையும் அசௌகரியங்களையும் ஏற்கின்றோம்.

சிலர், தாங்கள் உபயோகிக்கும் அறையைச் சுத்தமாகவோ, அழகாகவோ வைப்பதில்லை. தாங்கள் வீட்டில் உப யோகிக்கும் பொருட்களை நன்றாக வைப் பதில்லை. தங்களின் உடைகளைக்கூட உரிய விதமாக வீட்டில் அடுக்கி ஒழுங்காக வைப்பதில்லை. ஆனால், தங்களை இஞ்ச் இஞ்சாக உற்றுக் கவனித்து, உற்றுக் கவனித்து அலங்காரம் செய் வார்கள். அதற்கான ஒப்பனை பொருட் களுக்காக ஏராளம் செலவிடுவார்கள். பல்வேறு கோணங்களில் தங்களைப் பார்த்து நன்றாயிருக்கின்றோம் என்று உறுதிப்படுத்திவிட்டுத்தான் வீட்டிற்கு வெளியே செல்வார்கள். இதனுடைய அர்த்தம் என்ன? தங்களின் அறையை அவர்கள்தானே பார்க்கின்றனர். தங்க ளையோ, உலகம் பார்க்கிறதே என்ற சிந்தனைதான்.

நண்பர் ஒருவர் டீசர்ட் அணிந் திருந்தார். ஒரு பிரயாணமாய்ச் சென்ற போது அவருக்குக் கண்கண்ணாடி, பேனா போன்றவை தேவைப்பட்டது. ஆனால், அவற்றைச் சௌகரியமாக வைப்பதற்கு அந்த டீ சர்ட்டில் பாக்கெட் இல்லை. கண்ணாடியை அணியா வேளையில் அதனை சௌகரியமாக தன்னுடன் வைத்திருக்க முடியவில்லை. ஏனென்றால், டீ சர்ட்டில் பாக்கட் இல்லை. பாக்கட் உள்ள டீசர்ட் வாங்கியிருக்கலாமே என்றபோது, அது இப்போது பேஷன் இல்லை என்றார். தற்போதைய பேஷன் தெரியாதவராக தன்னை யாரும் பார்த்துவிடக்கூடாதே என்ற எண்ணம், அவரை அசௌகரியமாகப் பிரயாணம் பண்ண வைத்தது. இது ஒரு சின்ன விஷயம்தான். ஆனால், நாங்கள் தற்கால பேஷனோடு ஒட்டிப்போகிறோம் என்று காண்பிக்க, மனிதர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

உலகத்தைப் பிரியப்படுத்த

சில பெண்கள், எதிரில் ஒரு ஆண் வரும்போதெல்லாம் சற்று அசௌகரிய உணர்வோடு தங்களை உற்றுக் கவனிப்பார்கள். ஏனென்றால், அவர்கள் நாகரீகத்திற்காகத் தங்களை அரை குறையாகவே உடுத்தியிருப்பது அவர் களுக்குத் தெரியும்.

மற்றவர்களுக்கு முன்பாக நாம் நன்றாகத் தோன்ற வேண்டும் என்ற எண்ணம் தவறல்ல. இல்லத்து நபர் களைத் தவிர வேறு யாரும் பாராதபடி வீட்டில் இருப்பதைப் போலப் பலர் நம்மைப் பார்க்கும் இடத்தில் இருக்கக் கூடாது. அதே வேளையில், மற்றவர் களுக்கு ஏற்றவிதமாக இருக்க வேண்டும் என்பதைவிட, பிறர் நடுவில் சரியாக இருக்க வேண்டும் என்ற எண்ணமும் வேண்டும். பிறருடைய கண்களுக்கு நவநாகரீகமான ஒரு தோற்றத்தைக் கொடுப்பதையே மேன்மை என்று எண்ணக்கூடாது. பிறருக்கு முன்பாக நாகரீகமான ஒரு வாழ்க்கைமுறை நமக்கு இருக்கிறது என்பதைக் காட்ட வேண்டும். நாம் பிறர் பார்வைக்கு ரசனைக்கேற்ப இருக்கின்றோம் என்ற

திருப்தியை மட்டும் அல்ல. பிறர் பார்வைக்குக் கௌரவமாகவும் கண்ணியமாகவும் தோன்றுகின்றோம் என்ற நிச்சயம் வேண்டும். நவநாகரீக அந்தஸ்தான ஒரு தோற்றத்தைப் பார்த்து நமக்கு மார்க் போட வேண்டும் என்று அல்ல. நாம் ஒழுக்கமானவர்கள் என்றும், மதிப்பிற்குரிய நற்தோற்றத்தை மதிக்கின்றவர்கள் என்றும் பிறர் உணர வேண்டும்.

உலகம் நம்மிடம் உலகத்திற்கேற்ற தோற்றத்தைத்தான் நாகரீகமாகவும், மதிப்பிற்குரியதாகவும் பார்க்கும். ஆனால், இந்த ஒழுக்கமறியாத உலகத்திற்கு நாம் ஒழுக்கத்தை விரும்புகின்றவர்கள் என்பதைக் காட்ட வேண்டும். நவநாகரீகமான ஒரு தோற்றத்தைவிட யாருக்கும் இடறலற்றதும், முன்மாதிரிக்கு ஏற்றதானதுமான ஒரு தோற்றத்தைத்தான், நாம் மேன்மையாக எண்ணுகின்றோம் என்பதைக் காட்ட வேண்டும்.

இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் அணியாதிருங்கள் என்று வேதம் நமக்குக் கூறுகிறது. (ரோமர் 12:2) இந்த உலகத்தின் சுவைகளும், தேர்வுகளும், மதிப்பீடுகளும், பார்வைகளும் நல்ல கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை அல்ல. எனவே, உலகம் எப்படி என்னைப் பார்க்க விரும்புகிறதோ அப்படியே என்னைக் காண்பிக்க விரும்பினால், அது உலகத்திற்கு நாம் அடிமையாகி விட்டதற்குச் சான்றாகும். சிலருக்கு நல் ஒழுக்கத் தோற்றத்தோடும், ஆரோக்கியமான தோற்றத்தோடும் காணப்பட ஆசை உண்டு. ஆனால், இந்த உலக மக்களின் நவநாகரீகக் கவர்ச்சித் தோற்றங்களின் நடுவில் செல்லும்போது, ஒரு அசௌகரிய உணர்வு வந்துவிடுகிறது. அவர்களுடைய பார்வையில் நாம் வேற்று கிரகவாசிகளைப் போல தோன்றுவோமே என்று. எது சரியானதோ அதனை மதிக்கத் தெரியாமல், எது உலகத்திற்குப் பிரியமானதோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றவர்களுக்கு, நாம் அடிமைகள் ஆகக்கூடாது.

ஒழுக்கம், அடக்கம், கனத்திற்குரிய தோற்றம் போன்றவற்றை அசட்டை செய்யும் மனிதர்களின் அங்கீகாரம் நமக்கு அவசியமல்ல. ஒட்டு மொத்த உலகத்துக்கு ஏற்றவர்களாயிருப்பதை விடப் பரிசுத்தத்தை எதிர்பார்க்கும் தேவனுக்கு முன்பாக, அவருக்கு ஏற்றவர்களாயிருப்பதே மேன்மையானது. எது சரியோ, எது மேன்மையோ அதை அறியாத சமுதாயத்துக்கு நம்மை உகந்தவர்களாக்குவது அல்ல. நம்முடைய நல்மனசாட்சிக்கு நாம் சரியாயிருக்கின்ற ஒரு நிச்சயம் வேண்டும். நம்முடைய வாழ்வின் அஸ்திபாரமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நாம் சரியாக இருக்கின்றோம் என்ற நிச்சயம் வேண்டும். ★★★★

சிந்தனைக்கு சில வார்த்தைகள்

பக்தியை காண்பிக்க பல வழிகள் உண்டு.
பரிசுத்தத்தை காண்பிக்க நற்சுபாவங்கள் என்ற ஒரே ஒரு வழியே உண்டு.
நற்குணங்கள் எத்தனை பேரால் பாராட்டப்படுகின்றது என்பதைப் பாராதே,
அவை உனக்கு எந்த அளவிற்கு பயனுள்ளது என்பதை பார்.

மேலானவைகளை பயன்படுத்துவாரில்லையே



"இன்றைய கிறிஸ்தவ ஊழிய வட்டாரத்தில் ஒரு வித்தியாசமான கலாச்சாரம் காணப்படுகிறது. அநேகர் தங்களுக்கு அது கைகொடுக்கிறதைக் காண்கின்றார்கள். அது என்ன? ஜனங்கள் எதைக் கொடுத்தால் பயன்படுத்துவார்களோ, அதனைப் புரிந்துகொண்டு கொடுப்பது. ஜனங்கள் பேரளவில் தங்களுக்கு எது பயனுள்ளதாயிருக்குமோ அதனைப் பயன்படுத்த ஆர்வமற்றவர்களாகவும் பயன்படுத்துவதில் பெலவீனர்களாகவும் உள்ளனர். "

ஒரு பாடல் ரசிக்கப்பட்டால் அதுதான் அது பயன்படுத்தப்படுதல். ஒரு சினிமா ரசிக்கப்பட்டால் அதுதான் அதனைப் பயன்படுத்துதல், ஏனென்றால், ரசிக்கப் பட வேண்டும் என்பதுதான் அவற்றின் பின்னால் உள்ள நோக்கம். ஒரு சுவை யான உணவை பலர் வாங்கி சாப்பிட வேண்டும். அதுதான் அதனை பயன் படுத்துதல். தயாரிக்கப்பட்ட பொருட்கள் சந்தைக்கு வரும்போது, ஜனங்கள் அதனை வாங்கிப் பயன்படுத்த வேண்டும். அதுதான் தயாரிப்புகளின் பின்னால் உள்ள நோக்கம்.

உலகத்தில் பலருடைய உழைப்பு களும் பிரயாசங்களும் செயல்களும் ஜனங்களால் அதனதனுடைய தன்மைக் கேற்ப பயன்படுத்தப்படுகிறது. ஆனால் ஒரு உண்மையான தேவ போதனை யாளன் சத்தியத்தைப் பிரசங்கிக்கும் போது அது பலரால் பயன்படுத்தப்படுவ தில்லை. சத்தியத்தை கேட்ட ஜனங்கள் அதன்படி நடக்க வேண்டும். அதுதான்

உண்மையான தேவ ஊழியனின் நோக்கமாயிருக்கும். ஆனால், பேரளவில் அவன் ஏமாற்றமே காண்பான். ஏனென்றால், அவற்றைப் பெற்றுக் கொண்டு பயன்படுத்துகின்ற மக்களை அவன் அதிகமாக பார்ப்பது கடினம்.

பயன்படுத்தப்படாத வார்த்தைகள்

அநேகர் சத்தியத்தைக் கேட்பார்கள். அநேகர் சத்தியத்தை ரசிப்பார்கள். அநேகர் சத்தியத்தைப் பாராட்டுவார்கள். ஆனால் பயன்படுத்தமாட்டார்கள். சிலர் வாழ்நாள் முழுவதும் கேட்பார்கள். ஆனால், கேட்டதைப் பயன்படுத்தி அடைய வேண்டியதை அடையாமலே வாழ்க்கையை முடிப்பார்கள். சிலர், ஒரு போதும் கேட்கும் பழக்கத்தை விடமாட்டார்கள். ஆனால், ஒருபோதும் பின் பற்றும் பழக்கத்திற்கு வரமாட்டார்கள். உண்மையான தேவ ஊழியன், தரமான தேவ சத்தியங்களை ஜனங்களுக்குக் கொடுகின்றான். ஆனால், அவை எந்த அளவிற்குக் கேட்டவர்களால் பயன்படுத் தப்படுகிறது என்று கவனிக்கச் சென்றால், அவனுக்கு ஏமாற்றமே அதிகமாகக் கிடைக்கும்.

இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் ஒரு இனிய பாடலை ஒருவன் பாடினால், அதனைப் பல்லாயிரங்கள் கேட்டு ரசிப் பதைப் பார்த்து அவன் திருப்தியடைகின்றான். இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் ஒரு தேவ ஊழியன் மாதம் தோறும் தேவன் கொடுக்காத வாக்குத் தத்தத்தைக் கொடுத்தால், பல்லாயிரங்கள் வந்து அதனை ஆவலோடு கேட்கின்றதைப் பார்த்து திருப்தியடைகின்றன. இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் வியாபார நோக்குடன் ஒரு ஜெபக் கூடுகையை நடத்தினால், அநேகர் அதில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று ஆவலாய் பங்கேற்பதைப் பார்த்து திருப்தியடைகின்றான். இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் ஒரு பொய்த் தீர்க்கதரிசி பொய்யான தரிசனத்தை சொன்னால், பல்லாயிரங்கள் அதனைச் சிந்தனையின்றி நம்புவதைப் பார்த்து திருப்தியடைகின்றான்.

ஆனால், ஒரு உண்மையான தேவ ஊழியன், எப்படியாவது கர்த்தருக்கேற்றவர்களாக ஜனங்கள் மாற வேண்டுமே என்ற ஆத்துமபாரத்தோடு, ஆரோக்கியமான தேவ வார்த்தையைக் கொடுக்கிறான். அதனை ஜனங்கள் பெற்று அதனை பயன்படுத்தி அவ்விதம் மாறுவதை அந்த ஊழியன் பார்ப்பது மிக மிக அபூர்வம். ஏனென்றால், அவை பேரளவில் கற்பாறை மேல்விழுந்த

★★★

அதிக வாஞ்சையோடும் எதிர்பார்ப்புகளோடும் உண்மையான தேவ ஊழியன் கொண்டு செல்லும் வார்த்தைகள் உரிய விதமாக பயன் படுத்தப்படாததைக் கண்டு துக்கப்பட நேரிடுகிறது.

★★★

விதைகளாக எந்தப் பயனையும் காணா மல் போய்விடுகிறது. ஜனங்கள் பாடலைப் பயன்படுத்துகிறார்கள். ஆராதனையை பயன்படுத்துகிறார்கள். ஜெபக் கூட்டத் தைப் பயன்படுத்துகிறார்கள். அற்புத வரங்களைப் பயன்படுத்துகின்றார்கள். ஆனால், தங்களின் கல்லான மனதை மாற்றுவதற்காக கர்த்தர் கொடுக்கும் வார்த்தைகளையோ பெற்றுக் கொண்டா லும் பயன்படுத்துவதில்லை. தயாரிப் பாளர்களின் பொருட்கள் பயன்படுத்தப் படுவதைக் காணும் போது தயாரிப்பாளன் மகிழ முடிகிறது. வியாபாரியின் பொருட் கள் விரும்பி வாங்கப்படும் போது வியா பாரியால் மகிழ முடிகிறது. ஆனால், அதிக வாஞ்சையோடும் எதிர்பார்ப்புகளோடும் உண்மையான தேவ ஊழியன் கொண்டு செல்லும் வார்த்தைகள் உரிய விதமாக பயன்படுத்தப்படாததைக் கண்டு துக்கப்பட நேரிடுகிறது.

இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களைப் பயன்படுத்த ஜனங்கள் தீவிரமாயிருந் தார்கள். இயேசு கிறிஸ்துவின் குணமாக் கும் வல்லமையைப் பயன்படுத்த ஜனங்கள் தாமதிக்கவில்லை. இயேசு கிறிஸ்து அற்புதமாய் அப்பங்களை பங்கிட்டுக் கொடுத்தபோது, ஜனங்கள் ஆவலோடு பயன்படுத்தினார்கள். ஆனால், வாழ்க்கையை மாற்றும் வார்த் தைகளைக் கொடுக்க வந்தேபோதோ விருப்பமில்லாமல் கிளம்பிச் சென் றார்கள். (யோவான் 6:60) அவருடைய வார்த்தைகளைக் கேட்டவர்களும், அவரை ஆண்டவர், ஆண்டவர் என்று கூறி மரியாதை காட்டினார்களேயன்றி, அவர் வார்த்தைகளின்படி நடக்க ஆர்வம் காட்டவில்லை. எனவே தான், நீங்கள் என்னை ஆண்டவரே, ஆண்டவரே! என்று சொல்லுகிறீர்கள். ஆனால், நான் சொல்லுகிறபடி செய்வதில்லையே என்று வருதப்பட்டார். (லூக்கா 6:46)

எது பயன் உள்ளது

ஏன் வார்த்தைகள் பயன்படுத்தப்பட வில்லை. அவை அவர்களின் இருதயத்தி ற்கு ஏற்றதாக இல்லை. அவர்களுக்கு அதில் பசி இல்லை. ஏனென்றால், அவர் களுக்கு ஆவிக்குரிய இருதயம் இல்லை. எனவே, பக்திக்காக தேவ வார்த்தைகள் கேட்கப்பட்டாலும், வாழ்க்கைக்காக அவை எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவர் களுக்குள் இருப்பது பக்தி இருதயம். அது தேவனுக்கு மரியாதை கொடுக்க விரும்பும். ஆனால், தேவ வார்த்தையை உட்கொண்டு மனமாற்றத்தையும்

உண்மையான தேவ ஊழியன் ஜனங்கள் பயன்படுத்துவதை அல்ல. ஜனங்களுக்கு உண்மையான பயன்தருகின்றவைகளையே கொடுப்பான்.



வாழ்க்கை மாற்றத்தையும் காண விரும்பாது. அது பக்தியாய்க் கேட்க விரும்பிய போதிலும் பரிசுத்தமாய் வாழ விரும்பாது. அது ஆசீர்வாதங்களைப் பெற விரும்பினாலும், ஆசீர்வாதமாக வாழ்வதற்குத் தேவையான தேவ வார்த்தைகளுக்கு இசைந்து போகாது.

எனவே, இன்றைய கிறிஸ்தவ ஊழிய வட்டாரத்தில் ஒரு வித்தியாசமான கலாச்சாரம் காணப்படுகிறது. அநேகர் தங்களுக்கு அது கைகொடுக்கிறதைக் காண்கின்றார்கள். அது என்ன? ஜனங்கள் எதைக் கொடுத்தால் பயன்படுத்துவார்களோ, அதனைப் புரிந்துகொண்டு கொடுப்பது. ஜனங்கள் பேரளவில் தங்களுக்கு எது பயனுள்ளதாயிருக்குமோ அதனைப் பயன்படுத்த ஆர்வமற்றவர்களாகவும், பயன்படுத்துவதில் பெலவீனர்களாகவும் உள்ளனர். இயேசு கிறிஸ்து அற்புதம் செய்து அப்பம் பங்கிட்டபோது அதனை, எல்லோரும் பயன்படுத்தினார்கள். ஆனால் அவர்களுக்கு மிகவும் பயனுள்ள நித்திய வாழ்விற்குரிய அப்பத்தைக் குறித்து பிரசங்கித்தபோதோ சலிப்படைந்து போய்விட்டனர்.

எனவே, அனேகர் ஜனங்கள் எதைக் கொடுத்தால் விருப்பத்தோடு பயன்படுத்துவார்களோ அதனைக் கொடுக்கின்றனர். இனிமையான பாடல், உற்சாகமான ஆராதனை நிகழ்ச்சி, ஆசீர்வாத நம்பிக்கை, வாக்குத்தத்தம், வல்லமை உணரும் வாய்ப்பு, பரவச வார்த்தைகள், ஆன்மிக நிறம் பூசப்பட்ட கட்டுக்கதைகள் பொய்த்தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள், நடனங்கள் ஆராதனை என்ற பெயரில் கேளிக்கை கூத்துக்கள் போன்றவை கொடுக்கப்பட்டால், அவற்றை ஜனங்கள் நிச்சயம் பயன்படுத்துவார்கள். அவர்கள் கர்த்தருடைய போதனைகள் சார்ந்த பரிசுத்த வாழ்க்கையைத் தவிர எல்லாவற்றையும் பயன்படுத்துவார்கள். எனவேதான், ஜனங்களைப் பிரியப்படுத்தி தங்கள் சுய நோக்கத்தை அடைய விரும்புகின்றவர்கள் இவ்விதமே செய்கின்றனர். ஆனால் இவர்களால் வழங்கப்படும் எதுவும் உண்மையான ஆசீர்வாதங்களையோ நித்திய வாழ்வையோ அவர்களுக்கு கொடுக்காது.

ஜனங்கள் தங்களின் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை திரளாகச் சேர்த்துக் கொள்வார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரித்தான். (2 தீமோத்தேயு 4:3)

ஆனால், உண்மையான தேவ ஊழியன் ஜனங்கள் பயன்படுத்துவதை அல்ல. ஜனங்களுக்கு உண்மையான பயன்தருகின்றவைகளையே கொடுப்பான். ஆனால், போலி ஊழியர்கள் தங்களின் போலி ஆன்மிகத் தயாரிப்புகளை ஜனங்கள் ஆர்வமாய்ப் பெற பயன்படுத்துவதைப் பார்த்து மனுஷீகமாக திருப்தி அடைவார்கள். ஆனால் உண்மையான தேவ ஊழியனோ, எது மிக பயனுள்ளதோ, எது மிகத் தேவையானதோ எது தேவனால் உண்மையாகத் தரப்பட்டதோ, அவற்றின் மேன்மையைக் காண இயலாமல் ஆவிக்குரிய பார்வையற்றவர்களாக இருப்பதைப் பார்த்து வருத்தமடைவான். அது, சரியானவைகள் பயன்படுத்தப்படாமல் போகிறதே என்ற ஆதங்கம்தான்.

●●

சிந்தனைக்கு

தவறை
தவறு ஒன்று
பார்ப்பது தவறல்ல;
ஆனால் தவறு செய்ய
நேரிட்ட காரணத்தை
கவனிக்காமல் போவது தவறு

நிர்ணயிப்பது யார்?

அவன் என்னை நல்லவன் என்றான்
நான் மகிழ்ந்தேன்
அவன் என்னை கெட்டவன் என்றான்
நான் அழுதேன்
அவன் என்னை புகழ்ந்தான்
நான் சிரித்தேன்
அவன் என்னை இகழ்ந்தான்
நான் துக்கித்தேன்
அவன் நான் உன் நண்பன் என்றான்
நான் எழுந்தேன்
அவன் நான் உன் விரோதி என்றான்
நான் விழுந்தேன்
அவன் என்னை அறிவாளி என்றான்
நான் தலையை நிமிர்த்தினேன்
அவன் என்னை முட்டாள் என்றான்
நான் தலைகுனிந்தேன்.
நான் கேட்டதை அவன் தந்தான்
அவனை நினைத்து சந்தோஷப்பட்டேன்
அவன் தந்ததை திருப்பிக் கேட்டான்
அவனை நினைத்து வருத்தப்பட்டேன்

என்ன முட்டாள்தனம் இது!
அவன்தான் என் சந்தோஷத்தையும்
சஞ்சலத்தையும்
எப்போதுமே நிர்ணயிக்கின்றான்
நான் எப்போது அவற்றை
நிர்ணயிப்பது?

ஆசிரியரின் பிற நூல்கள்

1.	சந்தோஷத்தின் வழிகள்	ரூ. 65
2.	இறை ஆசியுடன் இனிய குடும்பம் ★	ரூ. 100
3.	வெளிச்சத்தில் வெளிப்படும் உண்மைகள்	ரூ. 60
4.	வழிகாட்டும் சிந்தனைகள்	ரூ. 50
5.	சிலுவையில் இயேசுவின் இதய ஓசைகள்	ரூ. 60
6.	நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்	ரூ. 25
7.	பரிசுத்த வாழ்வின் பாதையில்	ரூ. 25
8.	நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்? ★	
9.	துதி மலர்கள் ஆயிரம் ★	
10.	தேவன் அங்கீகரிக்கும் ஜெபம்	ரூ. 65
11.	ஆராதனையும் அனுதின வாழ்க்கையும்	ரூ. 80
12.	விசுவாசத்தின் பிரதிபலிப்புகள் ★	ரூ. 60
13.	சிலுவையின் பாதையில் சில மனிதர்கள் ★	
14.	துக்கம் சந்தோஷமாக மாறும்	ரூ. 25
15.	ஆசீர்வாதங்கள் தடைபடுவது ஏன்?	ரூ. 25
16.	கிறிஸ்தவம் பேச்சில் அல்ல... செயலில்	ரூ. 60
17.	வல்லமையாக ஜெபிப்பது எப்படி? ★	
18.	சிந்தையை சீராக்கும் சிந்தனைகள்	ரூ. 55
19.	யார் என்னை தேற்ற முடியும்? ★	ரூ. 50
20.	மனந்திரும்பியது உண்மையா?	ரூ. 60
21.	சிலுவையில் அறையப்படும் சத்தியங்கள்	ரூ. 50
22.	உண்மையான ஆராதனை ★	ரூ. 55
23.	கலங்காதே மனமே கலங்காதே ★	
24.	சத்திய சிந்தனை முத்துக்கள் ★	
25.	ஆசீர்வாதத்தின் அடித்தளங்கள் ★	
26.	தேவனுடைய மனிதர்கள் எங்கே? எங்கே? ★	
27.	வாலிப வயதுகளில் நீ ★	
28.	துன்பங்கள் ஏன்? ஏன்?	ரூ. 50
29.	கண்ணீரின் காலங்களில்	ரூ. 50
30.	விசுவாசமா? வியாபாரமா?	ரூ. 50
31.	சிந்திக்க தூண்டும் சிந்தனைகள்	ரூ. 50
32.	ஆராதனை என்றால் என்ன?	ரூ. 60
33.	காதல் சரியா? தவறா?	ரூ. 60
34.	சோர்ந்து போகாதே மனமே	ரூ. 60
35.	தேவ உறவினால் வாழும் வாழ்க்கை	ரூ. 60
36.	அக்கினி வார்த்தைகள்	ரூ. 60
37.	மனநிலைகள் மாறணுமே	ரூ. 50
38.	கிறிஸ்தவன் இங்கே, கிறிஸ்தவம் எங்கே?	ரூ. 60
39.	சிந்தனைத் தோட்டத்தில் சிறுமலர்கள்	ரூ. 60
40.	அர்த்தமுள்ள ஆவிக்குரிய வாழ்க்கை	ரூ. 60
41.	உண்மையைச் சொல்கிறேன் இது கிறிஸ்தவம் அல்ல	ரூ. 60
42.	எப்படி வாழணும் கிறிஸ்தவ வாழ்க்கை	ரூ. 60
43.	வாலிபத்தை பாதுகாப்பது எப்படி? ★	ரூ. 60
44.	நீங்களும் உங்கள் பிள்ளைகளும்	ரூ. 35
45.	வித்தியாசமான விக்கிரகங்கள்	ரூ. 35
46.	தேவனுக்காக வாழ்வது என்றால்	ரூ. 35
47.	ஆவிக்குரிய வாழ்க்கை எதற்காக	ரூ. 35
48	இறை உறவினால் வாழும் குடும்பம்	ரூ. 70
49	தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவழிகள்	ரூ. 70
50	நான் ஏன் வாழ வேண்டும் ?	ரூ. 60
51	இது சத்தியமா, சிந்தியுங்கள் !	ரூ. 60
52	கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் என்ன?	ரூ. 70
53	சத்தியத்தின் வெளிச்சத்தில்	ரூ. 60
54	திருச்சபை என்பது எதற்காக?	ரூ. 70
55	மனம் திரும்புதலும் மறுபடி பிறத்தலும்	ரூ.80
56	பரிசுத்தமாக வாழச் செய்வது எது?	ரூ.80
57	பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எப்போது? எப்படி?	ரூ.80
58	கேட்டாலும் கேளாவிட்டாலும்	ரூ.80
59	வலிமையான நம்பிக்கைகள்	ரூ.70
60	உண்மை கிறிஸ்தவ அடையாளங்கள்	ரூ.70

SAMSON PAUL'S PUBLICATIONS IN ENGLISH

TRUE WORSHIP	RS.70
GODLINESS FOR YOUTH - WHY	RS. 60
IN THE TIMES OF DISTRESS	RS. 60
POWERFUL PRAYER LIFE, HOW?	RS.60
DELIGHTFUL FAMILY WITH DIVINE BLESSINGS	RS.100

- ☐ புத்தகங்கள் V.P.P.- யில் அனுப்பப்படுவதில்லை.
- ☐ பணம் அனுப்பிய பின்னரே புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்.

★ நட்சத்திர குறியிட்ட புத்தகங்கள் கையிருப்பு இல்லை

புத்தகங்களைப் பெற M.O.,அல்லது D.D., அனுப்ப வேண்டிய முகவரி

SAMSON PAUL
126, MUTHAYA MUDALIAR ST.,
PUDUCHERRY - 605 003.